

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 21.03.2024 | 12. நம்மிடம் பிறர் காட்டும் அன்பிலும் 'தேவனே' இருக்கிறார்! |
|---|---|



தெய்வ அன்பிற்கு 'மறுபுறம்' உண்டு: அது, தம் அன்பின் சீஷர்கள் மூலமாய் நமக்கு தேவன் காட்டும் அன்பு! அந்த அன்பு, நம் உள்ளத்தை கோடைகாலத்தில் நம் தேகம் குளிர்ந்த நீரில் நீராடிக் களைப்பாறுவதுபோல் இருக்கும்! தேவனுடைய பிள்ளைகள் நமக்குப் பாராட்டும் அன்பை நினைத்து ஆச்சரியப்படும்போது, நமது கண்கள் திறக்கப்படுகின்றன..... அங்கும்,

நாம் 'கர்த்தரையே' அவர்கள் அன்பில் காண்கிறோம். நம் உள்ளம் தொட்ட அவர்களின் அன்பும், ஆண்டவருடைய தூய அன்பே! அது, தெய்வ பிள்ளைகளோடு நாம் ஐக்கியமாய் இருக்கும்போது, தேவன் நம்மீது பொழியும் அன்பாய் இருக்கிறது!

ஆ தெய்வீக அன்பின் அவதாரமே
உம்மில் அன்புகூருகிறவர்கள் மூலமாய்
நின் அன்பை வெளிப்படுத்துகிறதினால்
நினை யாம் வணங்குகிறோம்
என்ற கீதமே, என்னிலிருந்து பாய்ந்துச் சென்றது!

– ரத்னம்